தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
30.07.2024

எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடக்கக்கூடாது:

# உயிருக்கு பயந்து ஓடிய மக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியதை ஏற்க முடியாது

## தூத்துக்குடி சம்பவம் தொடர்பான வழக்கில் ஐகோர்ட்டு நீதிபதிகள் கருத்து

சென்னை, ஜூலை.30-
உயிருக்கு பயந்து ஓடிய மக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியதை ஏற்க முடியாது என்றும், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடக்கக்கூடாது என்றும் தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பான வழக்கில் ஐகோர்ட்டு நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர்.

### தூத்துக்குடி துப்பாக்கி சூடு

தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பாக, தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த வழக்கை தேசிய மனித உரிமை ஆணையம் முடித்து வைத்ததை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, துப்பாக்கி சூடு சம்பவம் நடைபெற்ற காலத்தில் பணியாற்றிய காவல் துறை, வருவாய்த்துறை அதிகாரிகளின் சொத்து விவரங்களை சேகரிக்கும்படி தமிழக லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்தநிலையில் நேற்று அந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, காவல்துறை, வருவாய்த்துறை அதிகாரிகளின் சொத்து விவரங்களை சேகரிப்பது குறித்த விசாரணை அறிக்கையை தாக்கல் செய்ய 3 மாத அவகாசம் வழங்க வேண்டும் என அரசுத்தரப்பில் கோரப்பட்டது.

### முழு ஒத்துழைப்பு

வழக்கை விசாரித்த நீதிபதிகள், 'அதிகாரிகள் தங்களது சொத்து விவரங்களை தெரிவிக்க வேண்டும். அதன் அடிப்படையில் அந்த சொத்துகளை வாங்குவதற்கான வருவாய் ஆதாரங்களை லஞ்ச ஒழிப்புத் துறையினர் விசாரிக்க வேண்டும். லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணைக்கு அரசு செயலாளர், டி.ஜி.பி. ஆகியோர் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். சி.பி.ஐ. விசாரணை ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை. லஞ்ச ஒழிப்புத் துறையின் விசாரணை நியாயமாக நடத்தப்பட வேண்டும்' என அறிவுறுத்தினர்.

### ஏற்க முடியாது

மேலும், 'உயிருக்கு பயந்து ஓடிய மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது போல் இதற்கு முன் கேள்விப்பட்டது இல்லை. எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடக்கக்கூடாது என்பதற்காகவே இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துள்ளோம். பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு கொடுத்துவிட்டு வழக்கை முடித்து வைத்தது எப்படி நியாயம்?. காவல்துறையினர் தங்கள் தவறை உணர வேண்டும்' என்றனர்.

பின்னர், 'கடந்த 2009 முதல் 2014-ம் ஆண்டு வரை அனுமதியின்றி தொழிற்சாலை செயல்பட்டுள்ளது. ஒரு தனி நபரின் கட்டுப்பாட்டில் அரசு எந்திரம் செல்வது சமூகத்துக்கு மோசமானது என்பது தான் எங்கள் கவலை. இப்போதும் அந்த தனி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. அனுமதியின்றி தொழிற்சாலை செயல்பட்டது அரசுக்கு தெரியும். ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?. எல்லோரும் எங்கு இருந்தார்கள்?' என கேள்வி எழுப்பிய நீதிபதிகள் விசாரணையை 3 மாதங்களுக்கு தள்ளிவைத்தனர்.